செய்தி வெளியீடு எண்–522 நாள்– 22.8.2009

# முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் சென்னையில் பிரம்மாண்டமான முறையில் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா!

## மத்திய நிதியமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி அண்ணா திருவுருவம் பொறித்த 5 ரூபாய் நாணயங்களை வெளியிடுகிறார்!

## ஆந்திர மாநில முதலமைச்சர் திரு ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி அண்ணா நூற்றாண்டு விழா சிறப்பு மலரை வெளியிடுகிறார்!

## தமிழக அரசு அறிவிப்பு!

"பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஓராண்டு முழுவதும் கட்சி வேறுபாடின்றி தமிழக அரசின் சார்பில் கொண்டாடுவோம்" என 2008–2009ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, "அண்ணா நூற்றாண்டு விழா" தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டதைத் தொடர்ந்து, அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா 15.9.2009 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் முன்னிலையில் மிகச்சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில், மத்திய நிதியமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி, ஆந்திர மாநில முதலமைச்சர் திரு ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி ஆகியோரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்கிறார்கள்.

அண்ணா நூற்றாண்டினையொட்டி, அண்ணா அவர்களின் திருவுருவம் பொறித்த நாணயம் வெளியிடப்பட வேண்டுமென மத்திய அரசுக்குத் தமிழக அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று, அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் மத்திய நிதியமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் கலந்துகொண்டு அண்ணா அவர்களின் திருவுருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயங்களை வெளியிட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் தலைமையில், செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களைத் துணைத் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.ஜி.முத்துசாமி, இ.ஆ.ப., செய்தித் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி, சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவர் திரு.கயல் தினகரன், தமிழ்நாடு அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவர் கவிஞர் கா.வேழவேந்தன் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு தமிழக அரசு அமைத்துள்ள "மலர்க்குழு" அண்ணா அவர்களின் பெருமைகள் அனைத்தையும் உலகறியச் செய்யும் அரிய கருவூலமாக வடிவமைத்துத் தயாரித்துள்ள "அண்ணா நூற்றாண்டு நினைவு சிறப்பு மலர்", "ஆய்வு மலர்" ஆகியவற்றை ஆந்திர மாநில முதலமைச்சர் திரு ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி அவர்கள் வெளியிடுகிறார்கள்.

தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் இணையதளத்தைத் தொடங்கி வைத்து, 'தமிழரசு' இதழ் தயாரித்துள்ள "அண்ணாவின் பொன்மொழிகள்" நூல், அகரமுதலி இயக்ககம் தயாரித்துள்ள இரண்டு தொகுதி நூல்கள் ஆகியவற்றை வெளியிடுகிறார்கள்.

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.